## 93. கர்த்தருடைய நாமம் பலத்த

பல்லவி

கர்த்தருடைய நாமம் பலத்த துருகமே
நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்

அனுபல்லவி

நீதிமானின் பாதை நடுபகலை போல
சூரிய பிரகாசம் போல இருக்கும்

சரணங்கள்

1. நீதிமான் விரும்பின காரியங்கள்
தேவனால் அவனுக்கு கொடுக்கபடும்
நீதிமான் என்றும் அசைவதில்லை
துன்மார்கர் பூமியில் வசிப்பதில்லை
- கர்த்தருடைய நாமம்

2. நீதிமான் இக்கட்டுக்கு விடுவிக்கபடுவான்
துன்மார்க்கன் இக்கட்டிலே விடப்படுவான்
நீதிமானுக்கு பூமியில் சரிகட்டபடும்
துன்மார்க்கனுக்கு எத்தனை அதிகம்
- கர்த்தருடைய நாமம்

3. நீதிமானுக்கு ஒரு கேடும் வாராது
துன்மார்க்கரோ தீமையில் நிறைவார்கள்
நீதிமானின் வெளிச்சம் சந்தோஷமே
துன்மார்க்கரின் தீபமோ அனைந்துபோகும்
- கர்த்தருடைய நாமம்